தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# வன உயிரின வாரம் முன்னிட்டு ஆன்லைன் சொற்பொழிவு போட்டி

**கோவை, அக். 3–**

வன உயிரின வாரத்தை முன்னிட்டு, இந்திய வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம் சார்பில், ஆன்லைன் சொற்பொழிவு போட்டிக்கு, ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

'வன உயிரினங்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் என்ன' என்ற தலைப்பிலான இந்த சொற்பொழிவு போட்டியில், மாணவர்கள், பொது மக்கள் பங்கேற்கலாம்.

போட்டியாளர்கள், மூன்று நிமிடங்களுக்கு மிகாமல் ஆங்கிலத்தில் பேசி, அதை வீடியோவில் பதிவு செய்ய வேண்டும். அந்த வீடியோவை, 99443 28696 என்ற வாட்ஸ்அப் எண்ணுக்கோ அல்லது ifgtbenvis@gmail.com என்ற இ–மெயில் முகவரிக்கோ, தொடர்பு முகவரி, போன் விவரங்களுடன் நாளை மாலை 5:00 மணிக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

வெற்றி பெறும் முதல் மூவருக்கு ரொக்கப்பரிசும், பங்கேற்கும் அனைவருக்கும் இ–சான்றிதழும் வழங்கப்பட உள்ளன. வெற்றியாளர்கள் விவரம், வரும் 7ல் அறிவிக்கப்படும் என்று, வன மரபியல் பயிற்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

போட்டி குறித்த விவரங்களுக்கு. 99526 45333 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

229. News in Dinamalar, Coimbatore, 03.10.2020, Online Elocution Competition as part of Wildlife Week Celebrations by IFGTB ENVIS.